# ஆசிரை

கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி புதுவாழ்வு குழுவினா் தங்களது 23வது நிறைவு விழாவை நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார்கள். கடந்த 23 வருடங்களாக இறைவன் தமக்கு செய்த நன்றிகளை நினைத்து இறைவனைப் புகழ்ந்து, பாடி நன்றி செலுத்துகின்றார்கள். கடந்து வந்த பாதைகள், கல்லும் முள்ளும், மேடு பள்ளம், துன்பங்கள் கஸ்ரங்கள், ஏற்ற தாழ்வுகள் போன்ற சவால்கள் மத்தியிலும் வீறுநடை போட்டு, துணையாளன் என்னும் நாளார்ந்த இறைவார்த்தை பகிர்வை தொடந்து எமது மக்களுக்கு செய்து வருகின்றார்கள். இதையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். அத்தோடு கத்தோலிக்க திருச்சபையும் கத்தோலிக்க அருங்கொடை இயக்கம் ஆரம்பித்து 50வது யூபிலி ஆண்டையும் இவ்வருடம் கொண்டாடுகின்றது. தூய ஆவியானவரின் அருங்கொடை இயக்கம் இன்றும் கத்தோலிக்க திருச்சபையிலும் மிகவும் மறுமலர்ச்சியோடும், புத்தூக்கத்தோடும், உட்சாகத்தோடும் பல நாடுகளில் இயங்கி வருகின்றது. எமது தந்தை பிரான்சிஸ் அவா்கள் இந்த யூபிலி ஆண்டையொட்டி மிக முக்கியமான செய்தியொன்றை வெளியிட்டிருக்கின்றாா். கத்தோலிக்க அருங்கொடை இயக்கம் இன்னும் இறைவாா்த்தைப் பகிா்வையும், இறைவாா்த்யையில் இருக்கும் ஆழமான செய்தியையும் உலகிற்கு கொடுக்கும் கருவியாக மாறவேண்டும் என்றும், இன்னும் நற்செய்தி அறிவிப்புப் பணியில் மிக ஆா்வமாக இருக்கவேண்டும் என்றும் கூறியிருக்கின்றாா். எமது மறைத்தளத்திலும் இக்குழுவினா் சிறந்த முறையில் இயங்கி வருவதை நாம் எல்லோரும் அறிவோம். இறைவனின் இறைவாா்த்தையை உடைத்து, பகிா்ந்து கொடுப்பதிலும், இன்னும் ஒவ்வொரு வெள்ளி வழிபாடுகளில் கலந்து .இறைவனுக்கு நன்றி, புகழ்ச்சி, வேண்டுதல் செய்வதிலும் மிகவும் ஆா்வமாக இருப்பதையும் நாம் பாராட்டுகின்றோம். இக்குழுவைச் சோ்ந்த ஒவ்வொருவருக்கும் எமது ஆண்டுவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவா்களின் ஒவ்வொரு செயல்பாடுகளும் இறைவனின் அன்பையும், பேரிரக்கத்தையும் மற்றவா்களுக்கு கொடுக்கும் சிறப்பான செயற்பாடாக இருக்கின்றது. கத்தோலிக்க திருச்சபைக்கு இவ்வாறான பக்திச்சபைகள், குழுக்கள் இன்னும் இறையரசுப் பணியை விரிவுபடுத்துமாக அமைகின்றது. ஆதிக்கிறிஸதவா்களின் வாழ்க்கைமுறை மிகவும் முன்மாதிரியாக இருக்கின்றது. “ஒன்றாக சோ்ந்து செபித்தல், அப்போஸ்தலா்களுடைய படிப்பினையைக் கேட்டல், அப்பம் பிட்குதலிலும், இறைவேண்டுதலிலும் நிலைத்திருந்தாா்கள் என்று கூறப்படுகின்றது. (திரு.பணி.2:42-47) இறைவனின் ஆசீரும், மீட்பின் அன்னை மரியாளின் பரிந்துரையும் நிறைவாக இருப்பதாக. ஆமென்.

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
**Parish Priest Our Lady of Deliverance Tamil Catholic Mission**
**Montreal (QC), Canada.**